# இலங்கையின் 70ஆவது ஆண்டு சுதந்திரத்தில் - பெண்களாகிய நாங்கள்

பிரித்தானிய ஆட்சியிலிருந்து விடுபட்டு 70 ஆண்டுகள் பூர்த்தியானதைக் கொண்டாடும் வரலாற்றுப் புகழ்பூத்த இத்தருணத்தில், நாங்கள் பெண்களாயும், இலங்கை பூராகவும் உள்ள பெண்களது உரிமைகள் தொடர்பாக வேலை செய்பவர்களாயும், 1948ம் ஆண்டு முதல் இலங்கையில் பெண்கள் இயக்கங்கள் பெற்ற குறிப்பிடத்தக்க, போராடி வென்ற வெற்றிகளைக் கொண்டாட விழைகின்றோம். அதேசமயம் இத்தருணத்தை சமத்துவம், நீதி மற்றும் அபிவிருத்தியினை அடைந்து கொள்வதில் சாதி, வர்க்கம், இனம், மதம், பாலியல் நாட்டம் மற்றும் பால்நிலை அடையாளம், வலது குறைவு, பிரதேசம், இன்னும் பிற அடிப்படைகளில் பெண்களுக்குத் தொடர்ச்சியாக இருந்து வரும் சவால்களையும், தடைகளையும் நினைவு கூருகின்றோம். 'சுதந்திரம்' என்பது பெண்கள் என்ற ரீதியில் எங்களுக்கு என்ன அர்த்தத்தைத் தருகின்றது என்பதனை அரசியலமைப்புத் திருத்தம், நல்லிணக்கம், ஜனநாயகம், சட்டவாட்சி மற்றும் அபிவிருத்தி என்பதனூடாக நாங்கள் பிரதிபலிக்கின்றோம்.

## போராடியடைந்த மைற்கற்களை நினைவுகூரல்

இலங்கைப் பிரசைகளுக்கு எத்தனையோ தலைமுறைகளாக அனைவருக்கும் இலவச சுகாதார வசதிகளையும், இலவசக் கல்வியையும் உறுதிப்படுத்திய இலங்கையின் சுதந்திரத்தின் பின்னரான நலன்புரி அரசை பெண்களே துணை நின்று கட்டி எழுப்பினர். (முழு சமுதாயங்களும் இதனால் சமமாக நன்மை அடையவில்லை எனினும்) இந்தக் கொள்கைகள் ஆண்களோடு, பெண்களுக்கும் அனுகூலமானதொரு உடல்ரீதியான தரத்தினை உறுதிப்படுத்தின. கடந்த 70 வருடங்களில் அடைந்து கொண்ட ஏனைய வெற்றிகளில், தேசிய பால்நிலைக்கான அமைப்புகளை உருவாக்கியமை, பாலியல் வல்லுறவு, பாலியல் துன்புறுத்தல், குடும்ப வன்முறை போன்றவற்றை உள்ளடக்கிய பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் கையாள்வதற்காகவும், மற்றும் உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கு 25 சதவீத ஒதுக்கீட்டுக்காயும், புதிய மற்றும் உறுதியான சட்டங்களை உருவாக்கியமை என்பன உள்ளடங்கும். எவ்வாறெனினும், தொழில் உரிமைகள், காணி உரிமைகள், அரசியல் உரிமைகள், சமூக பாதுகாப்பு, இனவிருத்தி சுகாதாரம் மற்றும் உரிமைகள் என்பவை உள்ளடங்கலாக பல தளங்களில் பெண்கள் இன்னும் போராடுகின்றனர். ஆயினும் நீதி, வெளிப்படைத்தன்மை மற்றும் வகைப்பொறுப்பு என்பவை குறுகிய வெற்றியையே அடைந்துள்ளது. பெண்கள் பயமின்றி இத்தகைய போராட்டங்களையும், அணிதிரட்டலையும் முன்னெடுக்கின்றபோதும், அதன் விளைவாக அவர்கள் மீதான தாக்குதல்கள் எழாமலில்லை. சிவில் யுத்தத்தின் போது பெண்கள் ஒன்றாக செயற்படுவதற்கான, ஒன்றாக போராட்டங்களைக் கொண்டு செல்லக்கூடிய , உற்சாகமூட்டக் கூடிய உதாரணங்களைக் காட்டித் தந்துள்ளனர்.

## தொடரும் போராட்டங்கள்

யுத்தம் முடிவுற்று கிட்டத்தட்ட 9 ஆண்டுகள். பெண்கள் தொடர்ந்திருக்கும் **இராணுவ மயமாக்கலுக்கு** எதிராக இன்னும் போராடுகின்றனர். தமது காணிகளை மீளப் பெற போராடுகின்றனர். மேலும் மனித உரிமைகள் மீறல்கள் மீதான **உண்மையையும், நீதியையும்** தேடுகின்றனர். அநேக குடும்பங்கள், குறிப்பாக வடக்கு, கிழக்கிலுள்ள பெண் தலைமைக் குடும்பங்கள் போதிய வாழ்வாதாரம் இன்மை, அதிகரிக்கும் கடன் சுமை, யுத்தத்தின் விளைவால் எழுந்த பொருளாதார மற்றும் ஏனைய இழப்பீடுகளுக்கு போதிய நட்டஈடு இன்மை போன்ற சொல்லொணா பொருளாதார சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர். அதிலும் குறிப்பாகப் பெண்கள் அதி நிச்சயமற்ற சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடவும், மட்டுப்படுத்தப்பட்ட வருமானத்தைத் தரக் கூடிய வளங்களுடன் செயற்படவும் எதிர்பார்க்கப்படுகின்றனர். எவ்வாறெனினும் பெண்கள் தம்மையும், தமது குடும்பங்களையும், சமூகங்களையும் நிலைபேறாக்கவும், அதனை வலுப்படுத்தவுமான தீர்மானங்களைத் தொடர்ந்தும் எடுத்து வருகின்றனர்.

**பாலியல் மற்றும் உடல்சார் சுயாதீனத்தின்** மிக அடிப்படையான விடயங்களைப் பொறுத்தளவில் கிட்டத்தட்ட எந்த அடைவுமே இல்லை. கருக்கலைப்பினையும், ஒருபால் திருமணங்களையும் குற்றமற்றதாக்கல், அலைந்து திரிதல் சட்டத்தினை இல்லாமலாக்கல் (இது பாலியல் தொழிலாளிகளை துன்புறுத்தவும், தரம் குறைக்கவும் பிரயோகிக்கப்பட்ட பழைமையான, காலனித்துவ சட்டம்), திருமணத்துக்குள்ளான பாலியல் வல்லுறவினை குற்றமாக்கல் என்பதுடன் மதுபானத்தினை வாங்க, தயாரிக்க, மற்றும் விற்பதற்கான உரிமைகளுக்காக வாதாடுகின்றபோதும் இன்னும் பெண்கள் பாதகமான நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளனர்.

அரசினது **ஊழியம்** தொடர்பான கலந்துரையாடல்களில் பெண்கள் தமது வீடுகளிலும், குடும்பங்களிலும் செய்யும் பாரிய அளவிலான ஊதியமற்ற ஊழியத்தினை கழித்து விடுகின்றனர். அரசின் அதிகரித்து வரும் தாராண்மைவாதக் கொள்கைகள் பெண்களை பெரிதும் பாதித்துள்ளன. கடல்கடந்தும், பெருந்தோட்டங்களிலும், ஆடைத் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் அரசுக்கு பெற்றுத் தரும் பெரும் இலாபங்கள் ஒருபுறமிருந்தும், இவர்களுக்கான எதுவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகளுமே இல்லை. அரசு இன்னும், இலங்கையின் பெரும்பாலான பெண்கள்

'பொருளாதாரரீதியாக இன்னும் செயற்படாமலே உள்ளனர்' என்று அபிவிருத்திச் சுட்டியினைக் காட்டி கிளியைப்போல கூறிக் கொண்டிருக்கின்றது. பெண்கள் எத்தனையோ தசாப்தங்களாக நாட்டையும், பொருளாதாரத்தையும் கட்டி எழுப்புவதில் ஆற்றியுள்ள பங்களிப்போடு நோக்குகையில் பெண்களது உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான அரசின் உத்தரவாதமானது பாரியளவு குறைவானதாகவேயுள்ளது.

மேலும், அரசின் அபிவிருத்திக் கொள்கைகளும், திட்டங்களும் முழு சமுதாயங்களையும் பாரிய அளவில் இடப்பெயர்வுக்குள்ளாக்கி இருக்கின்றது. அரசாங்கத்தின் முன்னுரிமைகள் ஏலவே சலுகையளிக்கப்பட்டவர்களுக்கே சாதகமானதாகவும், வருமானம் குறைந்த சமுதாயங்கள், அனைத்து வகையான சிறுபான்மைகள், மற்றும் வரலாற்றுரீதியாக விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்களையும் புறக்கணிப்பதாயும், மிகவும் நியாயமற்ற முறையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

**பெண்கள், சிறுமிகள் மீதும், பாலியல் மற்றும் பால்நிலை சிறுபான்மையினர் மீதுமான வன்முறையானது** எமது குடும்பங்களின் கைகளிலும், எமது சமூகத்தின் கைகளிலும் மற்றும் அரச கட்டமைப்புகளின் கீழும் தண்டனையின்றித் தொடர்கின்றது. பெண்கள் இணையத் தளங்களிலும் தொடர்ச்சியாக வன்முறைக்குள்ளாக்கப்படுவது அதிகரித்து வருவதுடன் இதற்கான நிவாரணமும் இன்றிக் காணப்படுகின்றது. தற்போதைய உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரங்களில் பெண் வேட்பாளர்களுக்கெதிராக இடம்பெறும் வன்முறை, 'பெண்கள் அரசியலுக்குத் தகுதியானவர்களல்ல' என்ற கூற்றானது பெண்களுக்கெதிரான பாரபட்சத்திற்கும், அடக்குமுறைக்கும் எதிராக பெண்கள் காட்டும் எதிர்ப்பினது வெளிப்படுத்தலுக்கு எதிராகக் காட்ட முனையும் ஒரு தெளிவான நினைவூட்டலாகும். **பெண்களது அரசியல் பிரதிநிதித்துவத்தினை அதிகரிப்பது தொடர்பில், குறிப்பாக மாகாண மற்றும் பாராளுமன்ற மட்டங்களில், தொடர்ந்தும் பாரிய தடைகள் காணப்படுகின்றன**. பாரபட்சமான **முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தினை** மாற்றுவதற்கு எதிரான நிலைப்பாடுகள் அரசியல், சமய மற்றும் சமூகத் தலைமைகளின் பெண்களுக்கெதிரான சமூக மனப்பாங்கினையும், பெண்கள் மீதான வெறுப்பினையுமே வெளிப்படுத்துகின்றன.

அதிகரிக்கும் **இன-மத வன்முறையும், தீவிரவாதமும்** குறிப்பாக பெண்களைத் தாக்குகின்றன. ஒட்டுமொத்தமாக அரச மற்றும் சமூக மட்டங்களில் நாம் ஒரு கருத்தியல் பின்னடைவைக் காணக்கூடியதாக உள்ளது. தொந்தரவுக்குரிய, ஆணாதிக்க, எதிர்ப்பாலின பார்வையானது பெண்களை பழைமையான பால்நிலை வகிபாகத்துக்குள்ளும், பெண் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற சமூக மனப்பாங்குக்குள்ளும் தள்ளிவிடுகின்றது. இது 'பெண்' என்றால் 'தாய்' என்பதுடனும், குடும்பத்தை கட்டிக்காப்பவர் என்றும், அவள் சமூக மற்றும் நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றுபவள் என்பதுடனும் ஆழமான கரிசனையைக் கொண்டுள்ளது. 'கலாசாரம்' என்பதன் அர்த்தமானது ஆண்களுக்கு சௌகரியமான, சாதகமான முறையிலேயே பிரயோகிக்கப்படுகின்றதுடன், எப்போதும் பெண்களது சுதந்திரத்தையும், உரிமைகளையும் மட்டுப்படுத்துவதாக உள்ளது.

**முன்னோக்கி நகர்தல்**

பெண்கள் என்ற முறையில் எங்களுக்கு 'சுதந்திரம்' என்பதன் அர்த்தம் என்ன? 'சுதந்திர' நாடு என்று சொல்லப்படுகின்ற நாட்டில், பெண்களது சுயாதிக்கமானது சமூக, கலாசார, மற்றும் கட்டமைப்புரீதியாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சில வழக்காற்று சட்டங்களின் கீழ் அரசின் முன் பெண்கள் இன்னும் பராயமடையாதவர்களாகவும், தீர்மானம் எடுக்கத் தகுதியற்றவர்களாகவும் கருதப்படுகின்றனர்.

சுதந்திரம் என்பது எம்மைப் பொறுத்தளவில் அரச நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மையும், வகைப்பொறுப்புமாகும்: அரசியலமைப்புத் திருத்தம், நிலைமாறு கால நீதி நடவடிக்கைகள் உள்ளடங்கலாக ஜனநாயக நடவடிக்கைகளில் ஆலோசனை வழங்கலும், பங்கேற்புமாகும்: இதன் அர்த்தமானது சுயாதீனமாகவும், சமமாகவும் இந்நடவடிக்கைகள் அனைத்திலும் பங்கேற்பதற்காக எமக்குள்ள உரிமைக்கான உத்தரவாதமாகும். சுதந்திரம் என்பதன் அர்த்தம் எம் முன்சென்ற தாய்மார்கள் போராடிய சமூக நலக் கொள்கைகளை வலுப்படுத்துவதாகும். மேலும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் என்பன அடிப்படை உரிமைகள் என்பதனை உறுதிப்படுத்துவதாகும். இதன் அர்த்தமாவது சுதந்திரமான ஒரு பெண்கள் ஆணைக்குழுவினை நியமிப்பதும், அரசியலமைப்பின் உறுப்புரை 16 இனை நீக்குவதும், (இச்சட்டம் நீதி முறை மீளாய்விலிருந்து எத்தனையோ பாரபட்சமான சட்டங்களைப் பாதுகாக்கின்றது) பெண்களது பாலியல் மற்றும் உடல் சுயாதீனம் தொடர்பாக அரசியலமைப்பு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்புமாகும்.

அரசானது அதிகமாக முதலீடுகளைச் செய்து வருவதனை நாம் காணக் கூடியதாகவுள்ள இக்கால கட்டத்தில், கருத்தியல் மற்றும் யதார்த்தத்தில், ஒரு தாராண்மைவாத பொருளாதார சந்தையிலும், தாராண்மைவாத கொள்கையிலும் - மனித உரிமைகள் என்பது வெறுமனே பெயருக்கானதாக மாறிப்போயுள்ள நிலையில், - சுதந்திரம் என்பது இலங்கையர்கள் அனைவரதும் பன்மைப்பட்ட அன்றாட வாழ்வின் யதார்த்தத்தை கருத்திலெடுத்த, மனித உரிமைகளின் அர்த்தபுஸ்டியான அமுலாக்கலாகும்.

இறுதியாக நாம் இலங்கையில் நீண்ட காலமாக யுத்த காலத்திலும், சமாதான காலத்திலும், ஒன்றாக இணைந்து எல்லைகளுக்கப்பால் சமாதானத்துக்காயும், நீதிக்காயும், சமத்துவத்துக்காயும் வேலை செய்த அனைத்து பெண்களின் பணியையும் அங்கீகரித்துக் கொண்டாடுகிறோம். உலகம் பூராகவும் தொடர்ச்சியாகப் போராடி வரும் பெண்களது உத்வேகத்தை முன்னுதாரணமாக்கி போராட்டத்தைத் தொடர நாங்கள் உறுதி பூணுகின்றோம். **தமது அரசாங்கத்தின் உதவியால் அன்றி, தொடர்ச்சியாக தம்மை அடக்கி பாரபட்சப்படுத்திய அரசாங்கத்தின் விளைவாக** பெண்கள் தொடர்ச்சியான பெண் வெறுப்பினை சவாலுக்குட்படுத்துவதையும், ஆணாதிக்கத்தை எதிர்ப்பதையும், நிசப்தங்களை உடைப்பதையும், அதிகாரங்களை இடையூறு செய்வதையும், மற்றும் தொடர்ந்தும் அவர்களது போராட்டங்களில் முக்கிய மைல்கற்களை அடைந்து கொண்டிருப்பதையும் காண்பதனால் நாங்கள் சர்வதேச ரீதியாகவும், உள்நாட்டிலும் முக்கியமான, ஆர்வத்துக்குரிய ஒரு கணமாக இதனைப் பார்க்கிறோம்.